Registered as News Paper | பக்கங்கள் 04 | விலை ரூபா: 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM | PEOPLES DAILY | மக்கள் தினசரி

நாதம்: 02 | திருவள்ளுவர் ஆண்டு 2022 | ஐப்பசி 14 | (31-10-1991) | வியாழக்கிழமை | ஓசை: 255

## வரைதாள் தடையால் பரீட்சை நடத்தமுடியாநிலை

ஒளிய வரைதாள்களை வடபகுதிக்கு எடுத்துவர கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் தடைவிதித்திருப்பதால் வடபகுதியில் நுண்கலைப் பரீட்சைகளை நடாத்த முடியாத நிலையில் வடபகுதிக் கல்வித்திணைக்களங்கள் உள்ளன. எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களில் வட இலங்கை நுண்கலை மன்றம் தனது நுண்கலைப் பரீட்சைகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் ஒளிய வரைதாள்களை வடபகுதிக்கு எடுத்து வருவதற்கான தடை தொடர்வதால் இப்பரீட்சைகளை காலவரையறையின்றி பிற்போட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதேவேளை மேற்படி பரீட்சையை நடாத்த (4ஆம் பக்கம் பார்க்க)

# சுவிட்சலாந்து அதிகாரி யாழ். வருகிறார்

# தமிழர் பிரச்சினை பற்றி புலிகளுடன் பேசுவார்

## மத்தியஸ்துவம் வகிக்க சுவிஸ் அரசு விருப்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மக்களின் தேசிய பிரச்சினை தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு சுவிட்சலாந்து அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் அடுத்த மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார். சுவிட்சலாந்து நாட்டின் மத்தியஸ்தத்தின்கீழ் சிங்கள அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் மத்தியில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இவர் முன்முயற்சிகளை மேற்கொள்வார். சுவிட்சலாந்து அரசாங்கத்தின் இந்த சமரச முயற்சிக்கு மேற்கு ஐரோப்பிய நாடுகளின் ஆதரவும், அனுசரணையும் இருப்பதாகத் தெரிகிறது. இந்த தகவலை சமீபத்தில் யாழ். வந்து திரும்பிய 'குவேக்கர்ஸ்' சமாதானக் குழுவினர் விடுதலைப் புலிகளிடம் தெரிவித்தனர்.

இலங்கையில் சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தொடர்ந்து நடைபெற்று வரும் மோதல்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு கவலை அளித்துள்ளதாகவும் இம்மோதலுக்கு நிரந்தர தீர்வொன்றைக்காண அவை விரும்புவதாகவும் தெரியவருகின்றது. இதில் நோர்வே, சுவீடன், சுவிட்சலாந்து என்பன தீவிர அக்கறை காட்டி வருகின்றன.

இதற்றின் முதற்கட்டநடவடிக்கையாகவே சுவிட்சலாந்து உயர்அரசஅதிகாரிஒருவர் இங்கு வரவுள்ளார். சுவிட்சலாந்து அரசாங்கத்தின் இம்முயற்சிக்கு பல மேற்கு நாடுகள் பின்னணியில் உள்ளதாகவும் அவற்றின் வேண்டுகோள்களின் அடிப்படையிலேயே சுவிட்சலாந்து அரசாங்கம் இத்தீர்மானத்தை எடுத்துள் (4ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### இளங்கிரன்

(நமது நிருபர்)

அண்மையில் ..... பகுதியில் நடைபெற்ற மோதல்சம்பவம் ஒன்றில்விடுதலைப்புலிகளைச் சேர்ந்த இளங்கிரன் (பத்மநாதன் ரஜீவன், தெல்லிப்பழை) ..... (4ஆம் பக்கம் பார்க்க)

## போராளி ஒருவர் ஆதரவாளர் இருவர்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இராணுவ முகாமில் இடத்திற்கு சென்று திரும்பிய விடுதலைப் புலிகளைச் சேர்ந்த போராளி ஒருவரும் இரு (4ஆம் பக்கம் பார்க்க)

## நவம்பர் இறுதியில் ஆண்டு இறுதிப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள அரச பாடசாலைகளிலும் நவம்பர் மாத இறுதியில் ஆண்டிறுதிப் பரீட்சைகள் நடைபெறவுள்ளது. நவம்பர் மாதம் 13, 14, 18, 19, 20 ஆம் திகதிகளில் மேற்படி ஆண்டிறுதிப் பரீட்சைகள் நடைபெறும் என்றும், இப்பரீட்சைகள் யாவும் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்படினும் பரீட்சையின் தரநிர்ணயத்துக்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றது என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மாணவர்களுக்கும் இம் மாணவர்கள் தற்போது அனுமதிபெற்றிருக்கும்பாடசாலை (4ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் டிசம்பர் 9. இல் க. பொ. த. சத. பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் இவ்வாண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறவுள்ளது.

இப் பகுதியில் மேற்படி பரீட்சையை நடாத்துவதற்கு ஏற்ற சாத்தியக்கூறுகள் பற்றி பரீட்சை ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து இவ்வாண்டு டிசம்பர் மாதம் 9ஆம் திகதி இப் பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

யாழ் மாவட்டத்தில் பரீட்சை நடாத்துவதற்குரிய சாதகமான சூழ்நிலை பற்றி யாழ். கல்விப்பணிப்பாளர் வானொலிச் செய்தி ஒன்றில் (4ஆம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. சா. பரீட்சையை பிற்போடாமல் நடத்துக

### - ஆசிரியர் சங்கம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

க. பொ. த. சாதாரண பரீட்சை ..... மாவட்டத்தில் ஒரு பொதுப் பரீட்சையை நடாத்துவதற்

## சண்டே ஒப்சேவர் செய்திக்கு குவேக்கர்ஸ் மறுப்பு

### புலிகளுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை இனப் பிரச்சினையில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டையும், தாம் முற்று முழுதாக எதிர்க்கும் தீர்வையும் விடுதலைப் புலிகள் அறிவிக்க வேண்டும். இவ்வாறு குவேக்கர்ஸ் சமாதானக் குழுவினர் விடுதலைப் புலிகள் தலைவர்களிடம் வலியுறுத்தியதாக கொழும்பிலி ..... யிட்ட செய்தியை குவேக்கஸ் சமாதானக் குழுவினர் உத்தியோக பூர்வமாக மறுத்துள்ளனர்.

விடுதலைப்புலிகளுக்கு உத்தியோக பூர்வமாக எழுதப்பட்ட கடிதத்தில் குவேக்கர்ஸ் கொழும்பு பத்திரிகையின் செய்தி தவறானது என்பதை தெளிவுபடுத்தியுள்ளனர். (4ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் நேற்று முன்தினம் பலியான இராணுவத்தின் தொகை 18 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நேற்றுமுன்தினம் நடந்த தாக்குதல்களில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் ..... பட்டதாக செய்தி வெளிவந்தது தெரிந்ததே. ஆனால் இத்தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது. ..... தோடு, மூவர் படுகாயம் அடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை திருக்கோணம (4ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இராணுவத்தின் மிரட்டலைத் தொடர்ந்து

## நவம்பர் இறுதியில் ஆண்டு இறுதிப் பரீட்சைகள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்டத்தில் உள்ள அரச பாடசாலைகளிலும் நவம்பர் மாத இறுதியில் ஆண்டிறுதிப் பரீட்சைகள் நடைபெறவுள்ளது. நவம்பர் மாதம் 13, 14, 18, 19, 20 ஆம் திகதிகளில் மேற்படி ஆண்டிறுதிப் பரீட்சைகள் நடைபெறும் என்றும், இப்பரீட்சைகள் பாடசாலை மட்டத்தில் நடாத்தப்படினும் பரீட்சையின் தரநிர்ணயத்துக்கான விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றது என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்ந்த மாணவர்களுக்கும் இம் மாணவர்கள் தற்போது அனுமதிபெற்றிருக்கும் பாடசாலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் டிசம்பர் 9. இல் க. பொ. த. சா. பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வட பகுதியில் இவ்வாண்டுக்கான கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறவுள்ளது.

இப் பகுதியில் மேற்படி பரீட்சையை நடாத்துவதற்கு ஏற்ற சாத்தியக்கூறுகள் பற்றி பரீட்சை ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டிருப்பதைத் தொடர்ந்து இவ்வாண்டு டிசம்பர் மாதம் 9 ஆம் திகதி இப் பரீட்சை திட்டமிட்டபடி நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

யாழ் மாவட்டத்தில் பரீட்சை நடாத்துவதற்குரிய சாதகமான சூழ்நிலை பற்றி யாழ். கல்விப் பணிப்பாளர் வானொலிச் செய்தி ஒன்றின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## க. பொ. த. சா. பரீட்சையை பிற்போடாமல் நடத்துக

### - ஆசிரியர் சங்கம் கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

க. பொ. த. சாதாரண பரீட்சையை டிசம்பர் மாதம் எக் காரணம் கொண்டும் பிற்போடாமல் வடக்கிலும் கிழக்கிலுள்ள சகல மாவட்டங்களிலும் நடாத்த பரீட்சைத் திணைக்களம் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமென வலியுறுத்தி இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் பரீட்சை ஆணையாளர் அவர்கட்கு ஓர் அவசரச் செய்தியை அனுப்பி வைத்துள்ளது.

பரீட்சை நடக்காதவிடத்து மாவட்டத்தில் ஒரு பொதுப் பரீட்சையை நடாத்துவதற்குரிய சகல ஒழுங்குகளையும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## மத்தியஸ்துவம் வகிக்க சுவிஸ் அரசு விருப்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மக்களின் தேசிய பிரச்சினை தொடர்பாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கு சுவிட்சலாந்து அரசாங்கத்தின் உயர்மட்ட அதிகாரி ஒருவர் அடுத்த மாதம் நடுப்பகுதியில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார். சுவிட்சலாந்து நாட்டின் மத்தியஸ்தத்தின்கீழ் சிங்கள அரசுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் மத்தியில் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு இவர் முன்முயற்சிகளை மேற்கொள்வார். சுவிட்சலாந்து அரசாங்கத்தின் இந்த சமரச முயற்சிக்கு மேற்கு ஐரோப்பிய நாடுகளின் ஆதரவும், அனுசரணையும் இருப்பதாகத் தெரிகிறது. இந்த தகவலை சமீபத்தில் யாழ். வந்து திரும்பிய 'குவேக்கர்ஸ்' சமாதானக் குழுவினர் விடுதலைப் புலிகளிடம் தெரிவித்தனர்.

இலங்கையில் சிறிலங்கா இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் தொடர்ந்து நடைபெற்று வரும் மோதல்கள் மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு கவலை அளித்துள்ளதாகவும் இம்மோதலுக்கு நிரந்தர தீர்வொன்றைக்காண அவை விரும்புவதாகவும் தெரியவருகின்றது. இதில் நோர்வே, சுவீடன், சுவிட்சலாந்து என்பன தீவிர அக்கறை காட்டி வருகின்றன.

இதற்றின் முதற்கட்டநடவடிக்கையாகவே சுவிட்சலாந்து உயர் அரச அதிகாரி ஒருவர் இலங்கை வரவுள்ளார். சுவிட்சலாந்து அரசாங்கத்தின் இம்முயற்சிக்கு பல மேற்கு நாடுகள் பின்னணியில் உள்ளதாகவும் அவற்றின் வேண்டுகோள்களின் அடிப்படையிலேயே சுவிட்சலாந்து அரசாங்கம் இத்தீர்மானத்தை எடுத்துள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### இளங்கீரன்

(நமது நிருபர்)

அண்மையில் பகுதியில் நடைபெற்ற மோதல்சம்பவம் ஒன்றில் விடுதலைப்புலிகளைச் சேர்ந்த இளங்கீரன் (பத்மநாதன் ரஜீவன், கைதடி, த...

(4 ஆம் பக்கம் பார்க்க)

### போராளி ஒருவர் ஆதரவாளர் இருவர்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இராணுவ... இடத்திற்கு சென்று திரும்பிய விடுதலைப் புலிகளைச் சேர்ந்த போராளி ஒருவரும் இரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சண்டே ஒப்சேவர் செய்திக்கு குவேக்கர்ஸ் மறுப்பு

### புலிகளுக்கு உத்தியோகபூர்வமாக அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை இனப் பிரச்சினையில் விடுதலைப் புலிகளின் நிலைப்பாட்டையும், தாம் முற்று முழுதாக எதிர்பார்க்கும் தீர்வையும் விடுதலைப் புலிகள் அறிவிக்க வேண்டும். இவ்வாறு குவேக்கர்ஸ் சமாதானக் குழுவினர் விடுதலைப் புலிகள் தலைவர்களிடம் வலியுறுத்தியதாக கொழும்பிலிருந்து வெளிவரும் "சண்டே ஒப்சேவர்' பத்திரிகை வெளியிட்ட செய்தியை குவேக்கர்ஸ் சமாதானக் குழுவினர் உத்தியோக பூர்வமாக மறுத்துள்ளனர்.

விடுதலைப்புலிகளுக்குஉத்தியோக பூர்வமாக எழுதப்பட்ட கடிதத்தில் குவேக்கர்ஸ் கொழும்பு பத்திரிகையின் செய்தி தவறானது என்பதை தெளிவுபடுத்தியுள்ளனர்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியப் பிரதமர் குறுகிய நேரமே கொழும்பில் தங்குவார்

(கொழும்பு)

சார்க் மாநாட்டில் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் கலந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. அவ்வாறு அவர் சார்க் உச்சி மாநாட்டில் கலந்துகொண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் நேற்று முன்தினம் பலியான இராணுவத்தின் தொகை 18 ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் நேற்றுமுன்தினம் நடந்த தாக்குதல்களில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாக செய்தி வெளிவந்தது தெரிந்ததே. ஆனால் இத்தாக்குதலில் கொல்லப்பட்ட படையினரின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளதோடு, மூவர் படுகாயமடைந்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை திருக்கோண

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் இராணுவத்தின் மிரட்டலைத் தொடர்ந்து மக்கள் இடம் பெயர்வு

சிறிலங்கா இராணுவத்தின் மிரட்டல் அறிவிப்பை அடுத்து வவுனியாவில் இரு கிராம மக்கள் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர்.

நொச்சிமோட்டைக்குத் தெற்கேஉள்ளசாந்தசோலை, தம்பனைச்சோலை ஆகிய தமிழ்க்கிராமங்களைச்சேர்ந்த மக்களே அச்சத்தில் இடம் பெயர்ந்து சென்றுள்ளனர்.

அக்கிராமங்களுக்கு அண்மையில் இராணுவம் நிலை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சார்க் மாநாட்டிற்கு துரித ஏற்பாடுகள்

(கொழும்பு)

கொழும்பில் நடைபெறவிருக்கும் 'சார்க்' உச்சிமாநாட்டிற்கான துரித ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த மாநாட்டில் பங்கு கொள்ளும் நாடுகளின் வெளிநாட்டு அமைச்சின் உயர் அதிகாரிகள் கொழும்பிற்கு வந்து கொண்டிருப்பதாகவும்,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உணவு விநியோகம் தொடர்பாய் நடைமுறை விதிகள் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போது சனசமூகத் திட்டம் யாழ்ப்பாணத்தில் நடைமுறையில் இல்லாதபடியால் சனசமூகத் திட்டத்தில் தெரிவு பெற்றவர்களுக்கு தற்போதைய வறுமை நிலமையை கருத்திற் கொண்டு உணவு முத்திரை வழங்குவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் நேற்று அத்தியாவசிய உணவுப் பொருள்கள் விநியோகம் தொடர்பாக அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சமாசங்களின் தலைவர்களும், பொது முகாமையாளர்களும் கலந்துகொண்டனர்.

அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மேலும் வருமாறு.

கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாக உலர் உணவு அட்டைக்கு விநியோகிக்கப்படும் அத்தியாவசிய உணவுப் பொருள்களைமக்கள் வாராந்தம் பெற்றுக்கொள்ளவேண்டும். ஒரு வாரத்திற்குரிய பொருள்களை மறு வாரத்தில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தேங்காய் எண்ணெய் நீக்கம்

யாழ் செயலகம் அறிவித்த அத்தியாவசிய பொருள்களின் பட்டியலிலிருந்து தேங்காய் எண்ணெய் நேற்றுமுதல் நீக்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கடும் மழையால் 38பேர் உயிரிழப்பு

(சென்னை)

தென் இந்தியாவில் இரண்டு நாட்களாகப் பெய்த அடைமழையினால் 38 பேர் உயிர் இழந்துள்ளார்கள்.

## புலிகளின் பிரச்சினை இந்தியாவின் தேசியபிரச்சினை

### இந்தியா பாதுகாப்பு இணை அமைச்சர்

தமிழகத்தில் விடுதலைப் புலிகளின் பிரச்சினையை இந்திய மத்திய அரசு ஒரு தேசிய பிரச்சினையாக கருதுகின்றது.

அதை ஒரு மாநிலப் பிரச்சினையாகக் கருதவில்லை என்று மத்திய பாதுகாப்புத்துறை இணையமைச்சர் கிருஷ்ணகுமார் தெரிவித்துள்ளார்.

நேற்று சென்னையில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய கிருஷ்ணகுமார் விடுதலைப் புலிகளின் ஊடுருவல் கட்டுப்பட்டு இப்போது நின்று விட்டது என்றும், அவர் அவின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சாதி, மதம் பற்றிய குறிப்பிற்குத் தடைவேண்டும்

### - காமினி பொன்சேகா

உத்தியோகபூர்வ தஸ்தாவேஜுகளில் சாதி, மதம்பற்றி குறிப்பிடத் தடை செய்யவேண்டும் என பிரதி சபாநாயகர் காமினி பொன்சேகா அரசாங்கத்தைக் கேட்டுள்ளார்.

இலங்கையிலுள்ள எந்தப் பிரஜையினதும் சாதி, மதத்தைக் குறிப்பிடுவதைத் தடை செய்வதற்கு சட்டம் கொண்டு வருமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

## பாலிய வன்முறை, கொலை இருவருக்கு மரண தண்டனை

(முல்லைத்தீவு)

குடும்பப்பெண் ஒருவரை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதுடன் அப்பெண்ணை கொலை செய்து அவரிடம் இருந்த தங்க நகைகளையும் அபகரித்த குற்றத்திற்காக

(4 ஆம் பக்கம் பார்க்க)

## தேவை

தன்னியக்க பிளேற்றின் அச்சு இயந்திரம் கையால் இயக்கும் (S/Demy) சிலிண்டர் இயந்திர இயக்குனர்கள் தேவை. நேரில் தொடர்புகொள்ளவும்.

விளம்பர இல: 120
மே/பா ஈழநாதம்
31 மகேந்திரா வீதி,
யாழ்ப்பாணம்.

(F/3)



## வெளிவாரிப் பட்டப்படிப்புகள் கல்வியாண்டு 1992/93

பேராதனை, யாழ்ப்பாண பல்கலைக் கழகங்களின் பட்டப் பாடநெறிகளான

கலை முதற்தேர்வு- G A Q
வர்த்தக முதற்தேர்வு- FIRST IN COMMERCE
விஞ்ஞான முதற்தேர்வு- G S Q
க. பொ. த. (உயர்தரம்) 3 பாடங்களில் சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்ப முடிவுத் திகதி- 31-10-91
விரிவுரைகள் 2-11-91 சனி பி. ப. 2 மணிக்கு ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு
உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- விஞ்ஞானம், வர்த்தகம், கணிதப் பிரிவு மாணவர்கள் கலை முதற்தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

(B/3403)



## நகைத்தொழிலுக்குரிய

டைமெசின்:- அச்சுவகைகள்

மாலை அச்சு, குளிசை அச்சு, பென்ரன் அச்சு, ஸ்ரார் தொட்டு அச்சு, காப்பு அச்சுகள்.

எம்போசிங் மெசின்:- அச்சுவகை
(சுவாமிபென்ரன்வகைகள்)

கட்டிங்மெசின்:-
3 1/2 அடி திண்டுக்கல்இரும்புப்பெட்டி இங்கிலீஷ் பெட்டி ஆகியன உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

மு. த. பாலகிருஷ்ணப்பத்தர்
இல. 86 நல்லூர் குறுக்குவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(R/1883)



யாழ். ஸ்ரீதர் திரையரங்கில்



இல்லத்தரசிகள் இதயத்திற்கு இதமான செய்தி

## நிம்

மற்றுமோர் மில்க்வைற் தயாரிப்பு

உங்கள் பாத்திரங்கள் எவர் சில்வர், பித்தளை, பிளாஸ்ரிக், கண்ணாடி எதுவானாலும் பளிச்செனத் துலக்கிட

"நிம்"

வேலைச் சிரமமில்லை.

விலை ரூபா 30/- மட்டுமே!

மில்க்வைற் நிம் (B/3406)


## 1-ம் ஆண்டுநினைவஞ்சலி



வீரஜனனம்
1966-01-10

வீரமரணம்
1990-11-06

திதி:- 1991-10-31

வீரவேங்கை லெப்ரினன்ட் சுஜி
(பொன்னுத்துரை, நாகஜீவா)
(பரப்புக்கடந்தான், மன்னார்)

கொத்தடிமை நீங்கிடவும்
குலப்பெருமை சாத்திடவும்
கொடுங்கோல் அழிந்திடவும்
கொடுத்தாயே உன்னுயிரை
ஆண்டொன்று ஆனாலும்
ஆறாது எம்துயர்.

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
-குடும்பத்தினர்

45, பாரதிவீதி,
சுண்டிக்குளி

(R/1884)

## அபிவிருத்தி கருத்தரங்கு

(நல்லூர்)

யாழ். கல்விப் பிராந்தியத்தில் இயங்கும் சிறிய பாடசாலைகளின் அபிவிருத்தி தொடர்பான கருத்தரங்கு இப்பாடசாலைகளின் அதிபர்களுக்கு வரும் நவம்பர் 21-ஆம் திகதி முதல் 25 வரை யாழ் கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறும்.

இது தொடர்பாக 150 மாணவர்களுக்கு உட்பட்டு இயங்கும் சிறிய பாடசாலைகளின் ஆசிரியர்கள், மாணவர்கள் தொகை விபரங்களையும், தளபாடக் குறைபாடுகள் மற்றும் உள்ள பிரச்சினைகள் பற்றித்தமக்கு உடனடியாகத் தெரிவிக்குமாறு யாழ் கல்விப் பணிப்பாளர் கோரியுள்ளார்.

## அங்குரார்ப்பணக் கூட்டம்

(நமது நிருபர்)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட கல்வி அபிவிருத்திக் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் வரும் சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணிக்கு, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சிக் கல்விக் கோட்டத்தின் கல்வி அபிவிருத்திக் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் பிற்பகல் 2.00 மணிக்கு நெல்லியடி ம.ம. வியிலும் நடைபெறவுள்ளது.

இக் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு கோட்டத்திலுள்ள அதிபர்களையும், பாடசாலை அதிபர்களையும், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்களையும், பொருளாளர்களையும் அவ்வப் பகுதிக்குரிய பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவ தமிழ் இலக்கிய கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் வரும் ஞாயிற்றுக் கிழமை 10 ஆம் திகதி அடைக்கல மாதா பாடசாலையில் (புனித மரியாள் வித்தியாலயத்தில்) நடைபெறவுள்ளது.

## அ.சார்பற்ற நிறுவனத்திற்கு செயலகம் உணவு விற்பனை

(யாழ்ப்பாணம்)

யாழ், மாவட்டத்தில் இயங்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு செயலக புனர்வாழ்வுப்பிரிவு அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்வதற்கு முடிவு செய்திருக்கின்றது.

இங்கு இயங்கி வரும் சில அரசசார்பற்ற நிறுவனங்களுக்கு மாவட்டத்திற்கு வெளியில் இருந்து பொருள்கள் எடுத்து வருவது தடைப்பட்டதைத் தொடர்ந்து மேற்படி முடிவு எடுக்கப்பட்டிருக்கின்றது. இதனால் அரசசார்பற்ற நிறுவனங்கள் தமது நிவாரண நடவடிக்கைகளுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை செயலக புனர்வாழ்வுப்பிரிவிடம் கொள்வனவு செய்து வருகின்றன. (க)

## வீடு திரும்புவோருக்கு நிவாரணம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப்பகுதியில் இருந்தும் நகரத்தை அண்டிய பகுதிகளில் இருந்தும் இடம் பெயர்ந்து சென்றமக்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் பட்சத்தில் ஒரு வாரகால நிவாரணம் வழங்கப்படும் என்று யாழ் செயலகம் அறிவித்திருக்கின்றது.

மேற்படி பகுதிகளில் இருந்து சுமார் 1500 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இக்குடும்பங்கள் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பும் பட்சத்தில் மேற்படி நிவாரணம் வழங்கப்படும் என்றும் இன்றேல் இக்குடும்பங்களுக்கு முகாம்களில் வழங்கப்படும் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

## வயோதிபர் தற்கொலை

## நிர்வாகம் தாதியிடம் விளக்கம் கோருகிறது

யாழ் வைத்தியசாலையில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டவர் தொடர்பாக தாதி ஒருவரிடம் யாழ் வைத்தியசாலை மேலிடம் விளக்கம் கேட்டுள்ளது.

கடந்த 26ஆம் திகதி இரவு வைத்தியசாலையின் 30 ஆம் வார்ட் பகுதியில் கிளிநொச்சி விசுவமடுப் பகுதியைச்சேர்ந்த வேலு என்ற நோயாளி தூக்குப் போட்டு தற்கொலை செய்து கொண்டமை தெரிந்ததே.

அன்றைய இரவு பணியிலீடுபட்டிருந்த தாதி ஒருவரிடமே விளக்கம் கோரப்பட்டுள்ளது. (தி)

## தளங்களை மூடிவிட அமெ-பிலிப்ஸ் ஒப்பந்தம்

(மணிலா)

பிலிப்பைன்சிலுள்ள அமெரிக்க இராணுவத்தளங்களை மூன்று வருடங்களில் முற்றாக மூடிவிடுவதற்கான புதிய ஒப்பந்தமொன்றை அமெரிக்காவும் பிலிப்பைன்சும் செய்து கொண்டுள்ளன.

இதற்கு முன்பாக இது தொடர்பாக அமெரிக்காவும், பிலிப்பைன்ஸும் செய்திருந்த ஒப்பந்தத்தை பிலிப்பைன்ஸ் செனட்சபை நிராகரித்திருந்தது தெரிந்ததே.


அனைவரையும் நாடி வந்துவிட்டது!

உதயதாரகை தயாரிப்புகள்

பலவகையில்

சிற்றுண்டிகள்.. .. .. ..


நினைவு கூருகின்றோம்...

1991 10 31

பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் விண்ணப்பிக்கலாம்.
விண்ணப்ப முடிவுத் திகதி- 31-10-91
விரிவுரைகள் 2-11-91 சனி பி. ப. 2 மணிக்கு ஆரம்பமாகின்றன.

விபரங்களுக்கு
உதவிப்பதிவாளர்
பட்டப்படிப்புகள் கல்லூரி
148/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

குறிப்பு:- விஞ்ஞானம், வர்த்தகம், கணிதப் பிரிவு மாணவர்களை முதற்தேர்வுக்கு விண்ணப்பிக்கலாம் என்பதை அறியத்தருகின்றோம்.

(B/3403)

---

## நகைத்தொழிலுக்குரிய

**டைமெசின்:- அச்சுவகைகள்**

மாலை அச்சு, குளிசை அச்சு, பென்ரன் அச்சு, ஸ்ரார் தொட்டு அச்சு, காப்பு அச்சுகள்.

**எம்போசிங் மெசின்:- அச்சுவகை**
(சுவாமி பென்ரன் வகைகள்)

**கட்டிங்மெசின்:-**
3 1/2 அடி திண்டுக்கல் இரும்புப்பெட்டி இங்கிலீஷ் பெட்டி ஆகியன உடனடியாக விற்பனைக்குண்டு.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

மு. த. பாலகிருஷ்ணப்பத்தர்
இல. 86 நல்லூர் குறுக்குவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(R/1883)

---

யாழ். ஸ்ரீதர் திரையரங்கில்

# மாங்குளம் தகர்ப்பு

[விவரணப்படம்]

# இனியொரு விதி

[குறும்படம்]

ஆகியன அரங்கம் நிறைந்த காட்சிகளாக காண்பிக்கப்படுகின்றன.

தினசரி ஒரு காட்சியும் (4 மணிக்கும்) சனி, ஞாயிறுகளில் இரண்டு காட்சிகளும் (4, 6 மணிக்கும்) காண்பிக்கப்படும்.

(B/3203)

---

அமரர் கிருஷ்ணானந்தன்

## நினைவுப் பணி மன்றம்

**கலந்துரையாடல்**

காலம்:: 1-11-91 வெள்ளி பிற்பகல் 4-30மணி
இடம்: யூனிவேர்சல்கந்தர்மடம்யாழ்ப்பாணம்
அமரர் கிருஷ்ணானந்தன் நினைவுப்பணிமன்ற செயற்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக்கவும்

(B/3404) செயலாளர்

---



விரஜனனம்
1966-01-10

வீரமரணம்
1990-11-06

திதி:- 1991-10-31

## வீரவேங்கை லெப்ரினன்ட் சுஜி

(பொன்னுத்துரை, நாகஜீவா)
(பரப்புக்கடந்தான், மன்னார்)

கொத்தடிமை நீங்கிடவும்
குலப்பெருமை சாத்திடவும்
கொடுங்கோல் அழிந்திடவும்
கொடுத்தாயே உன்னுயிரை
ஆண்டொன்று ஆனாலும்
ஆறாது எம்துயர்.

உன் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
-குடும்பத்தினர்

45, பாரதிவீதி,
சுண்டிக்குளி

(R/1884)

---

... கத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் வரும் சனிக்கிழமை முற்பகல் ஒன்பது மணிக்கு, பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சிக் கல்விக் கோட்டத்தின் கல்வி அபிவிருத்திக் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் பிற்பகல் 2.00 மணிக்கு நெல்லியடி ம.ம.வியிலும் நடைபெறவுள்ளது

இக் கூட்டங்களில் கலந்து கொள்ளுமாறு கோட்டத்திணை அதிபர்களையும், பாடசாலை அதிபர்களையும், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்களையும், பொருளாளர்களையும் அவ்வப் பகுதிக்குரிய பிரதிக்கல்விப்பணிப்பாளர்கள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கிறிஸ்தவ தமிழ் இலக்கிய கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் வரும் ஞாயிற்றுக் கிழமை 10 ஆம் திகதி அடைக்கல மாதா பாடசாலையில் (புனித மரியாள் வித்தியாலயத்தில்) நடைபெறவுள்ளது.

---

...அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

வயோதிபர் தற்கொலை

## நிர்வாகம் தாதியிடம் விளக்கம் கோருகிறது

யாழ் வைத்தியசாலையில் தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டவர் தொடர்பாக தாதி ஒருவரிடம் யாழ் வைத்தியசாலை மேலிடம் விளக்கம் கேட்டுள்ளது

கடந்த 26ஆம் திகதி இரவு வைத்தியசாலையின் 30 ஆம் வார்ட் பகுதியில் கிளிநொச்சி விசுவமடுப் பகுதியைச்சேர்ந்த வேலு என்ற நோயாளி தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டமை தெரிந்ததே.

அன்றைய இரவு பணியிலீடுபட்டிருந்த தாதி ஒருவரிடமே விளக்கம் கோரப்பட்டுள்ளது.

(தி)

## தளங்களை மூடிவிட அமெ-பிலிப்ஸ் ஒப்பந்தம்

(மணிலா)

பிலிப்பைன்சிலுள்ள அமெரிக்க இராணுவத்தளங்களை மூன்று வருடங்களில் முற்றாக மூடிவிடுவதற்கான புதிய ஒப்பந்தமொன்றை அமெரிக்காவும் பிலிப்பைன்சும் செய்து கொண்டுள்ளன

இதற்கு முன்பாக இது தொடர்பாக அமெரிக்காவும், பிலிப்பைன்ஸும் செய்திருந்த ஒப்பந்தத்தை பிலிப்பைன்ஸ் செனட்சபை நிராகரித்திருந்தது தெரிந்ததே.

---

அனைவரையும் நாடி வந்துவிட்டது!

# உதயதாரகை தயாரிப்புகள்

பலவகையில்

## சிற்றுண்டிகள்.. .. .. ..

ஒருமுறை சுவைத்தால்! மறுமுறை நினைத்தாலே! நாவில் நீருறும் சுவைமிக்க தரம்மிக்க சுத்தமான இனிப்பு, காரவகை, சிற்றுண்டிகள் இதோ சுவைத்துப்பாருங்கள்!

| | |
|---|---|
| இனிப்புச்சுவை தரும் | காரச்சுவை தரும் |
| கச்சான் அலுவா | கடலைச் சரை |
| எள்ளு அலுவா | பருப்புச் சரை |
| மஸ்கற் | மிக்சர் சரை |

இன்னும் இவைபோல......

**தயாரிப்பாளர்கள்:**
**பாதிக்கப்பட்ட பெண்கள் புனர்வாழ்வு நிறுவனம்**
**யாழ். மாவட்டம்.**

உதயதாரகைத் தயாரிப்புகளுக்காக நீங்கள் செலவு செய்யும் ஒவ்வொரு ரூபாவும் பாதிக்கப்பட்ட குடும்பங்களை நிமிரவைக்கிறது. உங்கள் தேவையைப் பூர்த்தி செய்யும்போது நீங்கள் சேவையும் செய்ய வாய்ப்பாகிறது. சேவை செய்ய விரும்பும் ஒவ்வொரு குடும்பமும் தேடிவாங்குவது உதயதாரகை தயாரிப்புகள்.
இன்னும் உங்கள் மதிய உணவை சுவையூட்ட வாங்கிப் பாவியுங்கள்
சுவையும், மணமும் மிக்க

## உதயதாரகை பப்படம்

மற்றும் இல்லத்தரசிகளின் நீண்ட பாவனைக்கு
இலைகளை தூய்மையாகத் திகழ வைப்பதற்கு
**தும்புத்தடி, விளக்குமாறு, இழைக்கயிறு**
போன்றவையும் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன

**அனைத்துக்கும் ஆதரவளியுங்கள்.**

**உதயதாரகை தயாரிப்புகள் உங்கள் தயாரிப்புகள்**

(R/1888)

---

# நினைவு கூருகின்றோம்...

## 1991 - 10 - 31

1987 ஆம் ஆண்டு இத்தினத்தில் நெடுங்கேணியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வாகனவிபத்தில் எமைப்பிரிந்த

**2ஆம் லெப். காண்டீபன்.** (சிதம்பரப்பிள்ளை செல்வநாயகம் - புளியம்பொக்கணை)

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு கோட்டைக் கல்லாறு பகுதியில் இந்தியப் படையினரின் முற்றுகையின் போது வீரமரணமெய்திய

**கப்டன் பிரான்சிஸ்** (இராசையா சடாட்சரபவான் - கோட்டைக்கல்லாறு)

நெடுங்கேணிப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற்போன நெடுங்கேணி - மாமடுவைச் சேர்ந்த நெடுங்கேணி மகாவித்தியாலய உயர் வகுப்பு மாணவன்

நுணாவில் இழக்கில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இரு தமிழ் இளைஞர்கள்

தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட சுண்டிக்குளியைச் சேர்ந்த யாழ் - பரியோவான் கல்லூரி மாணவன்

1990 ஆம் ஆண்டு கனகராயன்குளம் பகுதியில் எதிர்பாராத விதமாக கைக்குண்டு வெடித்ததில் எமைப் பிரிந்த

**சுரேஸ்** (இராசரட்ணம் விக்னேஸ்வரன் - பாவற்குளம்)

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.**

**- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(B/3405)

### ❋ சிந்தனைக்கு ❋

மிகச்சிறந்த குறிக்கோள்களை அடைய, மிகச்சிறந்த சாதனங்களை கையாள்வது தான், விவேகத்தின் அறிகுறி

— ஃபிரான்ஸிஸ் ஹட்சிஸன்

ஈழநாதம்

21, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம். 31-10-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025 - 2839 நிர்வாகபீடம்: 2398
த.பெ.எண் 65

## சுத. கட்சி நெருக்கடி யாருக்கு லாபம்?

சிறிலங்காவில் பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் பெரும் நெருக்கடி எழுந்துள்ளது. இந் நெருக்கடி திடீரென தற்பொழுது ஏற்பட்டதல்ல. கடந்த தேர்தல் தோல்வியுடன் ஆரம்பித்திருப்பினும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உச்சக் கட்டத்தை அடைந்தது. ஆனால் ஆளும் கட்சியான ஐக்கிய தேசிய கட்சிக்குள் எழுந்த கருத்து மோதல்களின் விளைவுகள் காரணமாக சுதந்திரக் கட்சியினர் தமது முரண்பாடுகளை மறந்திருந்தனர். தற்பொழுது அந் நெருக்கடி சற்று தணிந்த நிலையில் மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கருத்து மோதல்கள் தீவிரமாகியுள்ளன. அதேவேளை சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணை கோரும் மனு தோல்வி அடைந்ததால் ஏற்பட்ட பாதிப்புக்களையும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித் தலைமை ஏற்க வேண்டி வந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எழுந்துள்ள நெருக்கடிக்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் எதிர்க்கட்சித் தலைவியுமான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவிற்கும் அவரது மகன் அனுரா பண்டாரநாயக்காவிற்கும் இடையிலான முரண்பாடே முக்கிய காரணமாகும். இம் முரண்பாடு கொள்கை ரீதியானது என்பதைவிட சுதந்திரக் கட்சியின் எதிர்கால தலைமை பற்றியது என்பதே பொருத்தமானதாகும்.

தற்போதைய சுதந்திரக் கட்சித் தலைவியான ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா கட்சி கடந்த காலத்தைப் போன்றே ஓரளவு இடதுசாரிக் கொள்கைகளைக் கொண்டதாகவும் ஏனைய இடதுசாரிக் கட்சிகளுடன் கூட்டுக்களை ஏற்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்க்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டுள்ளார். ஆனால் இதனை மகன் அனுரா பண்டாரநாயக்கா ஏற்கவில்லை. இக் கொள்கையே கடந்தகால ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தோல்விக்கு காரணமெனச் சுட்டும் அனுரா பண்டாரநாயக்கா கட்சி திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்பதோடு இடதுசாரிகளின் கூட்டுகளினால் பெரும் லாபங்கள் ஏற்படப்போவதில்லை எனவும் தெரிவிக்கின்றார்.

அனுரா பண்டாரநாயக்காவின் இப் போக்கிற்கு கடந்தகால தேர்தல் தோல்வியைத் தவிர இன்றைய சர்வதேச சூழ்நிலையில் இடதுசாரிகள் அடைந்த தோல்விகளும், கம்யூனிச நாடுகளின் படிப்பினையும் காரணமாக இருக்கலாம்.

கொள்கை ரீதியான முரண்பாடு இவ்வாறு இருப்பினும் பிரதான முரண்பாடாக உணர்ச்சிபூர்வ வெளிப்பாடாகவும் சுதந்திரக் கட்சிக்குள் எழுந்திருப்பது சுதந்திரக் கட்சியின் எதிர்காலத் தலைமை யாருடையதென்பதேயாகும். தற்போதைய தலைவி ஸ்ரீமாவோ பண்டார

# தமிழீழத்தின் காணி உபயோகமும் விவசாய அபிவிருத்தியும் தொடர்பான கொள்கை

பொருளாதார அபிவிருத்தியின் ஆரம்பகட்டங்களில் விவசாயத்துறையே முன்னணியில் இருக்க வேண்டிய ஒரு துறையாகும். பொருளாதாரத்தின் கட்டமைப்பில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு உதவியாக மிகை உற்பத்தியைப் பெற்றுத்தருவது விவசாயத்துறையேயாகும். ஒரு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியின் ஆரம்ப கட்டங்களில் உணவுக்கான தேவை அதிகரிக்கின்றது. பொருளாதார அபிவிருத்தி ஏற்படும் போது மக்களின் வருமான மட்டங்கள் அதிகரிக்கின்றன. இதனால் உணவிற்கான தேவை அதிகரிக்கின்றது அதே நேரத்தில் பொருளாதார அபிவிருத்தியின் விளைவாக சுகாதார மருத்துவ வசதிகள் முன்னேற்றமடைவதனாலும் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைவதனாலும் இறப்புவீதம் விரைவாக வீழ்ச்சியடைகின்றது. இதனால் சனத்தொகையில் ஏற்படும் வேகமான அதிகரிப்பு உணவிற்கான தேவையை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது. இந் நிலையில் விவசாயத்துறைக்கு இரண்டு முக்கிய பணிகள் உள்ளன.

1. தற்போதுள்ள சனத்தொகைக்கும் வளர்ந்து வரும் சனத்தொகைக்கும் உணவு வழங்குதல்.
2. விவசாயத்துறையில் ஈடுபடாத தொழிலாளர்களுக்கு அதாவது கைத்தொழில் சேவைகள் ஆகிய துறைகளில் ஈடுபட்டிருப்போருக்கு உணவு வழங்குதல்.

இந் நிலையில் விவசாயத்துறையில் உற்பத்தித்திறன் அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டுச் செல்லும் போது விரிவடைந்து செல்லும் ஏனைய உற்பத்தித்துறைகளுக்கு கைத்தொழில், சேவைகள் துறைகளுக்குத் தேவையான தொழிலாளர்கள் விவசாயத்துறையிலிருந்தே செல்லல்வேண்டும். இந்நிலையில் விவசாயத்துறையில் எஞ்சியுள்ள தொழிலாளர்கள் தமது உற்பத்தித்திறனை அதிகரித்தால் மட்டுமே தமக்கும் விவசாயத்துறையில் ஈடுபடாத ஏனைய தொழிலாளருக்கும் உணவினை வழங்கக்கூடியதாக இருக்கும். இக்கட்டத்தில் விவசாயத்

தன் மூலம் அந்நியச் செலாவணியை உழைத்தல்.

கைத்தொழிற் துறைக்கு மூலப்பொருள்களை வழங்குதல் என்ற வகையிலும் கூட விவசாயத்துறை முக்கிய பங்கினை ஆற்றுகின்றது மேலும் வளர்ந்து வரும் கைத்தொழிற் துறைக்கு ஒரு பாரிய உள்நாட்டுச் சந்தையினையும் விவசாயத்துறையே வழங்குதல் வேண்டும். எனவே பொருளாதார அபிவிருத்திக்கு விவசாயத்துறையின் பங்களிப்பு மிக முக்கியமானதொன்றாகும். அதாவது பொருளாதாரத்திற்கு தலைமைதாங்கி அபிவிருத்திக்கு வழியமைத்துக் கொடுக்கும் பணியினையே விவசாயத்துறை ஆற்ற வேண்டியுள்ளது. நாட்டின் ஏனைய துறைகள் அபிவிருத்தியடைவதற்கு முன்தேவை விவசாயத்துறையின் அபிவிருத்தியாகும். விவசாயத்துறையில் அபிவிருத்தியினை மேற்கொள்ளாமல் ஏனைய துறைகளின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் குறைப்பிரசவக் குழந்தையாகவே காணப்படும். எனவே ஒரு நாடு கைத்தொழில் புரட்சியை ஏற்படுத்துவதற்கு முதல் விவசாயப்புரட்சியை ஏற்படுத்தவேண்டியது அவசியமாகும்.

அபிவிருத்தியடைந்து வரும் இலங்கைப் பொருளாதாரத்திலும் விவசாயத்துறை முதன்மை வகிக்கின்றது சுதந்திரத்திற்குப் பிந்திய கடந்த நாற்பதாண்டுகளில் பதவியேற்ற சிங்கள அரசாங்கங்களினால் விவசாய அபிவிருத்தி தொடர்பாக பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் விளைவாக விவசாயத்துறை எவ்வளவு தூரம் அபிவிருத்தியடைந்துள்ளது என்பதனைப் பின்வரும் தகவல்கள் - தரவுகள் எமக்குப் புலப்படுத்துகின்றன.

1. 27 சதவீதமான குடும்பங்கள் காணிகளற்றவையாக உள்ளன.
2. ஏறத்தாழ 42 சதவீதமான காணி உடைமைகள் இரண்டு ஏக்கருக்கும் குறைவானவையாகும்,
3. 82 சத வீதமான கிராமியக் குடும்பங்களின் மாதாந்த வருமானம் 400 ரூபாவிற்கும் குறைவானதாகும்.
4. தொழிலற்றோரில் 70 சத

டுமே உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தன. அதாவது ஏறத்தாழ 54 சதவீதமான குடும்பங்கள் தமது சொந்தநுகர்விற்காகமட்டுமே உற்பத்தி செய்தன. இந்த அளவீட்டிலிருந்து பெறப்பட்ட மற்றுமொரு உண்மை என்னவெனில் ஏறத்தாழ 30 சத வீதமான நிலப்பரப்பு வீட்டுநுகர்விற்கான உற்பத்திக்கும் பயன் படுத்தப்பட்டது. மேலும் 1982 ஆம் ஆண்டு விவசாய அளவீட்டின்படி தமிழீழத்தில் 259865 விவசாய காணி உடைமைகள் காணப்பட்டன. ஆனால் இவற்றில் 190038 காணி உடைமைகள் வீட்டுத் தோட்டங்களாகும். இங்கு வீட்டுத் தோட்டம் என்பது 1/8 ஏக்கர் அல்லது அதற்குக் குறைந்த நிலப்பரப்பில் பெருமளவிற்கு வீட்டு நுகர்விற்காக உற்பத்தியினை மேற்கொள்வதாகும். இதன்படி தமிழீழத்தின் மொத்தக் காணி உடைமைகளில் ஏறத்தாழ 73 சதவீதமானவை 1/8 ஏக்கருக்கும் குறைந்த பரப்பளவினையுடைய வீட்டுத் தோட்டங்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே பின்தங்கிய நிலையில் உள்ள தமிழீழ விவசாயத்துறையினை அபிவிருத்தி செய்வதன் மூலமே தமிழீழப் பொருளாதாரத்தில் ஒரு முழுமையான அபிவிருத்தியினை முன்னெடுத்துச் செல்லமுடியும். இதன் பின்னணியில் தமிழீழத்திற்கான ஒரு விவசாயக் கொள்கையினை வகுக்க வேண்டியது எமது முதற்பணியாக உள்ளது.

### விவசாயக் கொள்கை அவசியம்

தமிழீழத்திற்கான விவசாயக் கொள்கையினை வகுக்கும்போது இன்று உலகில் ஏற்பட்டுவரும் பொருளாதார மாற்றங்களை கவனத்திற்கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். இன்று எம்முன் பல தெரிவுகள் உள்ளன. திறந்த பொருளாதாரமா? அடைபட்ட பொருளாதாரமா? உற்பத்திச் சாதனங்களின் உடைமையாரிடம் இருத்தல் வேண்டும்? தனியார் துறையிடமா? அரசிடமா? அரசின் முழுக்கட்டுப்பாட்டில் இயங்கும் சோஷலிசப் பொருளாதாரக் கொள்கையா? தனியார் துறையிடம் அனைத்து நடவடிக்கைகளை ஒப்படைத்து விட்டு அதனை ஊக்குவிக்

கண்டுள்ளது தொழிலாளர்கள் தொழில் முயற்சிகளை தமது சொந்த இராச்சியங்களாகக்கருதி செயல்பட்டனர். தேசிய நலன்களிலும் பார்க்க தமது சொந்த நலன்களுக்கே முன்னுரிமை அளித்தார்கள். தொழில்சார் நிபுணர்களின் முகாமைமையை எதிர்த்து நின்றார்கள். உற்பத்தித் திறனையும், திறமையையும் புறக்கணித்து மிதமிஞ்சிய அளவில் தமது கூலிகளை உயர்த்தினார்கள், உயர்த்தப்பட்ட கூலிகளின் அளவிற்கு உள்உற்பத்தித் திறன் அதிகரிக்கவில்லை. இந்நிலைமை உயர்ந்த அளவிலான பணவீக்கத்திற்கு வழிவகுத்தது. யூகோஸ்லாவியாவில் பணவீக்கம் 1000 சதவீதத்திற்கு மேலாகக்காணப்பட்டது. மூன்றுமாத காலத்திற்குள் நாணயத்தின் பெறுமதி 50 மடங்காக வீழ்ச்சி கண்டிருக்கின்றது. வேலையின்மை வீதம் 16 சத வீதமாக உயர்ந்தது வெளிநாட்டுக் கடன்கள் 2100 கோடி டொலர்களுக்கும் அதிகமாக உள்ளது. இவையனைத்தும்

**வரதராஜன்**

சேர்ந்து அந்நாட்டில்முன்னெப்போதும் இருந்திராத மட்டத்திலான அரசியல் பொருளாதார நெருக்கடியொன்றைத் தோற்றுவித்துள்ளன.

எனவே இன்று சோவியத் யூனியன், சீனா போன்றவற்றின் பாணியிலான சோஷலிசமும் தோல்வி கண்டுள்ளது: யூகோஸ்லாவியா பாணியிலான சோஷலிசமும் தோல்வி கண்டுள்ளது. இந்தநெருக்கடிகளுக்கான காரணங்கள் என்ன? சோஷலிசம் அதன் பாதையின் முடிவிற்கு வந்துவிட்டதா? சோஷலிசம் என்பது வெறும் கற்பனாவாதமாக முடிந்து போகுமா? அல்லது இந்த இலட்சியத்தை வென்றடைவதற்கு வேறு மாற்றுவழிகள் உள்ளனவா? முதலாளித்துவத்திற்கு மாற்றாக இதுதவிரவேறு ஏதாவது வழிகள் உண்டா? இன்று நாம் எமக்குள்ளேயே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்விகள் இவை.

### சோசலிசம் கற்பனை வாதமா?

சோஷலிசப் பொருளாதார முறை இன்று தோல்வி கண்டுள்ள நிலையில் சோஷலிசத்

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் உச்சக் கட்டத்தை அடைந்தது. ஆனால் ஆளும் கட்சியான ஐக்கிய தேசிய கட்சிக்குள் எழுந்த கருத்து மோதல்களின் விளைவுகள் காரணமாக சுதந்திரக் கட்சியினர் தமது முரண்பாடுகளை மறந்திருந்தனர். தற்பொழுது அந் நெருக்கடி சற்று தணிந்த நிலையில் மீண்டும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கருத்து மோதல்கள் தீவிரமாகியுள்ளன. அதேவேளை சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிரான குற்ற விசாரணை கோரும் மனு தோல்வி அடைந்ததால் ஏற்பட்ட பாதிப்புக்களையும் சிறிலங்கா சுதந்திரக்கட்சித் தலைமை ஏற்க வேண்டி வந்தது.

சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்குள் எழுந்துள்ள நெருக்கடிக்கு சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவியும் எதிர்க்கட்சித் தலைவியுமான சிறிமாவோ பண்டாரநாயக்காவிற்கும் அவரது மகன் அனுரா பண்டாரநாயக்காவிற்கும் இடையிலான முரண்பாடே முக்கிய காரணமாகும். இம் முரண்பாடு கொள்கை ரீதியானது என்பதைவிட சுதந்திரக் கட்சியின் எதிர்கால தலைமை பற்றியது என்பதே பொருத்தமானதாகும்.

தற்போதைய சுதந்திரக் கட்சித் தலைவியான சிறிமாவோ பண்டாரநாயக்கா கட்சி கடந்த காலத்தைப் போன்ற ஓரளவு இடதுசாரிக் கொள்கைகளைக் கொண்டதாகவும் ஏனைய இடதுசாரிக் கட்சிகளுடன் கூட்டுக்களை ஏற்படுத்தி ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்க்க வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டுள்ளார். ஆனால் இதனை மகன் அனுரா பண்டாரநாயக்கா ஏற்கவில்லை. இக் கொள்கையே கடந்தகால சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தோல்விக்கு காரணமெனச் சாடும் அனுரா பண்டாரநாயக்கா கட்சி திறந்த பொருளாதாரக் கொள்கையை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும் என்பதோடு இடதுசாரிகளின் கூட்டுகளினால் பெரும் லாபங்கள் ஏற்படப்போவதில்லை எனவும் தெரிவிக்கின்றார்.

அனுரா பண்டாரநாயக்காவின் இப் போக்கிற்கு கடந்தகால தேர்தல் தோல்வியைத் தவிர இன்றைய சர்வதேச சூழ்நிலையில் இடதுசாரிகள் அடைந்த தோல்விகளும், கம்யூனிச நாடுகளின் படிப்பினையும் காரணமாக இருக்கலாம்.

கொள்கை ரீதியான முரண்பாடு இவ்வாறு இருப்பினும் பிரதான முரண்பாடாக உணர்ச்சிபூர்வ வெளிப்பாடாகவும் சுதந்திரக் கட்சிக்குள் நிலவியிருப்பது சுதந்திரக் கட்சியின் எதிர்காலத் தலைமை யாருடையதென்பதேயாகும். தற்போதைய தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது மகளான சந்திரிக்கா விஜயகுமாரணதுங்காவிடம் தலைமைப் பதவியை ஒப்படைக்க எண்ணுகின்றார். இதன் மூலம் சந்திரிக்காவின் தலைமையில் உள்ள மக்கள் கட்சியும் சுதந்திரக் கட்சியுடன் இணைந்து கட்சி பலம் பெறும் எனக் கருதுகின்றார். ஆனால் அனுரா பண்டாரநாயக்காவோ கட்சியின் தலைமை தன்னிடமே ஒப்படைக்கப்பட வேண்டும் என எண்ணுகின்றார். அதற்காக சுதந்திரக்கட்சி பிளவுபடுவதையும் அவர் ஆதரிக்கின்றார்.

சுதந்திரக் கட்சிக்குள் எழுந்துள்ள முரண்பாடுகள் தென்னிலங்கை அரசியலில் குறிப்பிடப்படும்படியான மாற்றங்களை ஏற்படுத்தலாம். சுதந்திரக் கட்சிக்குள் ஏற்பட்ட நெருக்கடியால் ஆளும் கட்சியான ஐக்கியதேசியக் கட்சி தற்போதைக்கு சிக்கல் எதுவுமின்றி தனது ஆட்சியைத் தொடரலாம். ஆனால் ஐக்கியதேசியக்கட்சி வாக்கு வங்கி பெரிதாக லாபம் அடையும் என்று சொல்லிவிட முடியாது. அதேவேளை எதிரணி வாக்குகள் சிதறுண்டு போவதால் லாபங்கள் கிட்டலாம்.

இதேவேளை ஐக்கியதேசியக் கட்சி அதிருப்தியாளர்களான லலித், காமினி குழுவினர் புதிய கட்சி ஒன்று அமைக்கும் பட்சத்தில் ஓரளவு லாபங்கள் பெறலாம். சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் சீர்திருத்தமும், கொள்கை மாற்றமும் வேண்டியே நெருக்கடி உருவாகியுள்ளது. இச் சீர்திருத்தங்களையும், கொள்கை மாற்றங்களையும் உடையவர்களாக ஐ. தே. கட்சி அதிருப்தியாளர்கள் உள்ளனர். இந்நிலையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதிருப்தியாளர்கள் ஐ. தே. கட்சி அதிருப்தியாளர்களுடன் சேர்ந்து கொள்ளலாம். இதன் மூலமாக இரு கட்சியைச் சேர்ந்த அதிருப்தியாளர்களும் ஒரு புதிய சக்தியாகப் பலம் பெறலாம். ஆனால் சிங்கள மக்களும் மாற்றத்தையும் புதிய தலைமைத்துவத்தையும் விரும்பின் மட்டுமே இது சாத்தியப்படும்.

---

வேற்றமடைவதனாலும் மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வடைவதனாலும் இறப்புவீதம் விரைவாக வீழ்ச்சியடைகின்றது. இதனால் சனத்தொகையில் ஏற்படும் வேகமான அதிகரிப்பு உணவிற்கான தேவையை மேலும் அதிகரிக்கச் செய்கின்றது. இந் நிலையில் விவசாயத்துறைக்கு இரண்டு முக்கிய பணிகள் உள்ளன.

1. தற்போதுள்ள சனத்தொகைக்கும் வளர்ந்து வரும் சனத்தொகைக்கும் உணவு வழங்குதல்.
2. விவசாயத்துறையில் ஈடுபடாத தொழிலாளர்களுக்கு அதாவது கைத்தொழில் சேவைகள் ஆகிய துறைகளில் ஈடுபட்டிருப்போருக்கு உணவு வழங்குதல்.

இந் நிலையில் விவசாயத்துறையில் உற்பத்தித்திறன் அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகின்றது. பொருளாதார அபிவிருத்தி ஏற்பட்டுச் செல்லும் போது விரிவடைந்து செல்லும் ஏனைய உற்பத்தித்துறைகளுக்கு கைத்தொழில், சேவைகள் துறைகளுக்குத் தேவையான தொழிலாளர்கள் விவசாயத்துறையிலிருந்தே செல்லவேண்டும். இந்நிலையில் விவசாயத்துறையில் எஞ்சியுள்ள தொழிலாளர்படை தமது உற்பத்தித்திறனை அதிகரித்தால் மட்டுமே தமக்கும் விவசாயத்துறையில் ஈடுபடாத ஏனைய தொழிலாளருக்கும் உணவினை வழங்கக்கூடியதாக விருக்கும். இக்கட்டத்தில் விவசாயத்துறை நவீனமயப்படுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது. இதனையே பசுமைப் புரட்சி அல்லது விவசாயப் புரட்சி என்பர்.

பெரும்பாலான அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் தமது கைத்தொழில் அபிவிருத்திக்குத் தேவையான இயந்திர சாதனங்களையும் மூலதனத்தையும் இறக்குமதி செய்ய வேண்டியுள்ளன. விவசாய உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வதன் மூலமே இத்தகைய இறக்குமதிகளுக்குத் தேவையான நிதிகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் இக்கட்டத்தில் விவசாயத்துறை இரண்டு வழிகளில் தனது பங்கினைச் செலுத்த முடியும்.

1. விவசாயத்துறையின் அபிவிருத்தியின் ஊடாக நாடு தனது உணவுத் தேவையில் தன்னிறைவு அடைவதன்மூலம் இது வரைகாலமும் உணவு இறக்குமதிக்காகச்செலவிடப்படும் அன்னியச்செலாவணி மீதப்படுத்தப்படுதல்.
2. விவசாயத்துறையின் அபிவிருத்தியின் ஊடாக விவசாய உற்பத்திப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கு முன்தேவை விவசாயத்துறையின் அபிவிருத்தியாகும். விவசாயத்துறையில் அபிவிருத்தியினை மேற்கொள்ளாமல் ஏனைய துறைகளின் அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் முயற்சிகள் அனைத்தும் குறைப்பிரசவக் குழந்தையாகவே காணப்படும். எனவே ஒரு நாடு கைத்தொழில் புரட்சியை ஏற்படுத்துவதற்கு முதல் விவசாயப்புரட்சியை ஏற்படுத்தவேண்டியது அவசியமாகும்.

அபிவிருத்தியடைந்து வரும் இலங்கைப் பொருளாதாரத்திலும் விவசாயத்துறை முதன்மை வகிக்கின்றது சுதந்திரத்திற்குப் பிந்திய கடந்த நாற்பதாண்டுகளில் பதவியேற்ற சிங்கள அரசாங்கங்களினால் விவசாய அபிவிருத்தி தொடர்பாக பல்வேறுபட்ட அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றின் விளைவாக விவசாயத்துறை எவ்வளவு தூரம் அபிவிருத்தியடைந்துள்ளது என்பதனைப் பின்வரும் தகவல்கள் – தரவுகள் எமக்குப் புலப்படுத்துகின்றன.

1. 27 சதவீதமான குடும்பங்கள் காணியற்றவையாக உள்ளன.
2. ஏறத்தாழ 42 சதவீதமான காணி உடைமைகள் இரண்டு ஏக்கருக்கும் குறைவானவையாகும்,
3. 82 சத வீதமான கிராமியக் குடும்பங்களின் மாதாந்த வருமானம் 400 ரூபாவிற்கும் குறைவானதாகும்.
4. தொழிலற்றோரில் 70 சத வீதத்தினர் விவசாயிகளாக உள்ளனர்.

கடந்த நாற்பதாண்டுகால அபிவிருத்தித் திட்டங்கள் யாருக்காக? செல்வந்தர்களை மேலும் செல்வந்தர்களாக்குவதற்கும் வறியவர்களை மேலும் வறியவர்களாக்குவதற்குமே இந்த அபிவிருத்தி திட்டங்கள் உதவின. இதன் பின்னணியிலேயே தமிழீழப் பொருளாதாரத்தில் விவசாய அபிவிருத்திக்கான திட்டங்களை நோக்குதல் வேண்டும்.

## தமிழீழப் பொருளாதாரம்

தமிழீழப் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விவசாயத்துறையே அமைந்துள்ளது தமிழீழத்தின் மொத்த சனத்தொகையில் ஏறத்தாழ 60 சதவீதம் விவசாய சனத்தொகையாகும். தமிழீழத்தின் கிராமிய சனத்தொகையின் அடிப்படையில் நோக்கும் போது 80 சதவீதம் விவசாய சனத்தொகையாக உள்ளது. 1982 ஆம் ஆண்டு விவசாய அளவீட்டின்படி தமிழீழத்தில் 231450 விவசாயக் குடும்பங்கள் இருந்தன. இவற்றுள் 123890 விவசாயக் குடும்பங்கள் வீட்டு நுகர்விற்காக மட்டுமே பெருமளவிற்கு வீட்டு நுகர்விற்காக உற்பத்தியினை மேற்கொள்வதாகும். இதன்படி தமிழீழத்தின் மொத்தக் காணி உடைமைகளில் ஏறத்தாழ 73 சதவீதமானவை 1 8 ஏக்கருக்கும் குறைந்த பரப்பளவினையுடைய வீட்டுத் தோட்டங்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது. எனவே பின்தங்கிய நிலையில் உள்ள தமிழீழ விவசாயத்துறையினை அபிவிருத்தி செய்வதன் மூலமே தமிழீழப் பொருளாதாரத்தில் ஒரு முழுமையான அபிவிருத்தியினை முன்னெடுத்துச் செல்லமுடியும். இதன் பின்னணியில் தமிழீழத்திற்கான ஒரு விவசாயக் கொள்கையினை வகுக்க வேண்டியது எமது முதற்பணியாக உள்ளது.

## விவசாயக் கொள்கை அவசியம்

தமிழீழத்திற்கான விவசாயக் கொள்கையினை வகுக்கும்போது இன்று உலகில் ஏற்பட்டுவரும் பொருளாதார மாற்றங்களை கவனத்திற் கொள்ள வேண்டியவர்களாக உள்ளோம். இன்று எம்முன் பல தெரிவுகள் உள்ளன. திறந்த பொருளாதாரமா? அடைபட்ட பொருளாதாரமா? உற்பத்திச் சாதனங்களின் உடைமையாரிடம் இருத்தல் வேண்டும்? தனியார் துறையிடமா? அரசிடமா? அரசின் முழுக்கட்டுப்பாட்டில் இயங்கும் சோஷலிசப் பொருளாதாரக் கொள்கையா? தனியார் துறையிடம் அனைத்து நடவடிக்கைகளை ஒப்படைத்து விட்டு அதனை ஊக்குவிக்கும் முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கையா? எதை நாம் தெரிந்தெடுப்பது?

இன்று சோஷலிச நாடுகளில் ஏற்பட்டுவரும் பொருளாதார சீர்திருத்தங்கள் எமக்குப் பல படிப்பினைகளைத் தருகின்றன. மத்திய மயப்படுத்தப்பட்ட நிர்வாகஆணைமுறை பொருளாதார அபிவிருத்திக்கு உகந்ததல்ல என்பது இன்று உணரப்பட்டுள்ளது. போலந்து, ஹங்கேரி போன்ற நாடுகள் மார்க்சியத்தையும் மத்திய மயப்படுத்தப்பட்ட பொருளாதார முகாமையையும் முற்றாக நிராகரித்துள்ளன. இந்நாடுகளில் சுதந்திர சந்தைப்பொருளாதாரமுறை உருவாக்கப்பட்டுள்ளது சீனா, சோவியத்யூனியன்போன்ற நாடுகள் மத்தியமயப்படுத்தப்பட்ட பொருளாதார முகாமை முறைக்குப் பதிலாக ஒழுங்குபடுத்தப்பட்ட சந்தைப் பொருளாதார முறைமையை அறிமுகப் படுத்தியுள்ளனர், மத்திய மயப்படுத்தப்பட்ட முகாமை முறைக்குப்பதிலாக யூகோசிலாவிய பாணியிலான தொழிலாளர் சுயமுகாமை முறையும் கூட இன்று தோல்வி றதும் நாணயத்தின் பெறுமதி 50 மடங்கால் வீழ்ச்சி கண்டிருக்கின்றது. வேலையின்மை வீதம் 16 சத வீதமாக உயர்ந்தது வெளிநாட்டுக் கடன்கள் 2100 கோடி டொலர்களுக்கும் அதிகமாக உள்ளது. இவையனைத்தும்

---

**வரதராஜன்**

---

சேர்ந்து அந்நாட்டில்முன்னெப்போதும் இருந்திராத மட்டத்திலான அரசியல் பொருளாதார நெருக்கடியொன்றைத் தோற்றுவித்துள்ளன.

எனவே இன்று சோவியத் யூனியன், சீனா போன்றவற்றின் பாணியிலான சோஷலிசமும் தோல்வி கண்டுள்ளது: யூகோஸ்லாவியா பாணியிலான சோஷலிசமும் தோல்வி கண்டுள்ளது. இந்நெருக்கடிகளுக்கான காரணங்கள் என்ன? சோஷலிசம் அதன் பாதையின் முடிவிற்கு வந்துவிட்டதா? சோஷலிசம் என்பது வெறும் கற்பனாவாதமாக முடிந்து போகுமா? அல்லது இந்த இலட்சியத்தை வென்றடைவதற்கு வேறு மாற்றுவழிகள் உள்ளனவா? முதலாளித்துவத்திற்கு மாற்றாக இதுதவிரவேறு ஏதாவது வழிகள் உண்டா? இன்று நாம் எமக்குள்ளேயே கேட்டுக் கொள்ள வேண்டிய கேள்விகள் இவை.

## சோசலிசம் கற்பனை வாதமா?

சோஷலிசப் பொருளாதார முறை இன்று தோல்வி கண்டுள்ள நிலையில் சோஷலிசத்திற்குப் பதிலாக முதலாளித்துவத்தை நடைமுறைப்படுத்துவதே எமது புதிய பொருளாதார சிந்தனையாகஇருத்தலாகாது. எம்முன் இரண்டு கேள்விகள் உள்ளன.

1. சோஷலிச பொருளாதார முறை நடைமுறைக்குச் சாத்தியமற்றதா? அதுஒரு கற்பனாவாதமா?

அல்லது

2. சோஷலிச பொருளாதார முறையினை நடைமுறைப் படுத்தியவர்களின் அணுகுமுறையான தவறுகளே இன்றையநெருக்கடிகளுக்குக் காரணமா?

உண்மையில் இவ்விரண்டு கேள்விகளுக்கும் ஆம் என்பதே எமது விடையாகவுமையும் மார்க்சிசம் - லெனினிச சித்தாந்தவாதிகள் சோஷலிசத்தின் இன்றியமையாத அம்சங்களை மட்டுமே வரையறுத்துக் கூறினார்கள். சோஷலிசம் குறித்த விரிவான உருவமொன்றை அவர்கள் தரவில்லை. மார்க்சிசம் - லெனினிசம் என்பது ஒருசர்வரோக நிவாரணி அல்ல.

(தொடரும்)

# ஓமந்தையில் இராணுவம் உண்மைக்கு புறம்பானது

(யாழ்ப்பாணம்)

வவுனியா-யாழ் பிரதான வீதியில் சிறிலங்கா இராணுவம் முன்னேறி வந்துள்ளது என்பதும் தற்போது ஓமந்தையில் இராணுவம் நிலைகொண்டுள்ளது என்பதும் உண்மைக்கு புறம்பான தகவல்கள் என்று வவுனியாவிலிருந்து நேற்றைய தினம் யாழ் வந்து சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

வவுனியா-யாழ் பிரதான வீதியில் நொச்சிமோட்டைக்கு தெற்கே உள்ள பகுதியான பேயாடி கூழாங்குளம் என்ற இடத்தைவிட்டு இராணுவம் கொஞ்சம் தானும் முன்னேறவில்லை என்றும் ஆனால் நொச்சிமோட்டையிலிருந்து வவுனியா நகரப்பகுதிவரை பொதுமக்கள் நேர்ப்பாதையில் செல்வதற்கு இராணுவம் அனுமதி வழங்கியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஆயினும் நொச்சிமோட்டை பெரிய பாலத்திற்கு மேலால் வாகனங்களைத்தவிர பாதசாரிகள் வரக்கூடாது என்றும் அப்பகுதியில் ஆற்றின் ஊடாக இறங்கிவரவேண்டும் என்றும் இராணுவம் அறிவித்துள்ளதாம்.

பாடசாலை மாணவர்கள் மற்றும் அரச ஊழியர்களைத் தவிர வேறு எவரும் சைக்கிள்களில் வவுனியா நகருக்கான போக்குவரத்தை மேற்கொள்வது தொடர்ந்து தடைசெய்யப்பட்டுள்ளதாம்.

தாண்டிக்குளம் சோதனை முகாமிலிருந்து வவுனியா நகரம் வரை பொது மக்கள் இராணுவ லொறிகளில் ஏற்றி இறக்கப்படுகின்றனர் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# மூவருக்கு மரணதண்டனை

(யாழ்ப்பாணம்)

கண்ணன் என்றழைக்கப்படும் ஜெயராசா நந்தகுமார் (28) சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்தவருக்கும் ராஜன் என்றழைக்கப்படும் செல்லத்துரை பரராஜலிங்கம் (38) 5/1 ஸ்ரான்லி கல்லூரி வீதி, அரியாலை மேற்கைச்சேர்ந்தவருக்கும், அப்புலிங்கம் என்றழைக்கப்படும் கந்தசாமி உதயேந்திரன் (20) அராலி வடக்கு வட்டுக்கோட்டையைச்சேர்ந்தவருக்கும் நேற்று முன்தினம் காலை பத்து மணிக்கும் பதினொருமணிக்கும்இடையே விடுதலைப் புலிகளால் மரணதண்டனை வழங்கப்பட்டது.

இவர்கள் இந்திய இராணுவம் தமிழீழத்தை ஆக்கிரமித்திருந்த காலப்பகுதியில் ஆயுதம் தாங்கிய குழுவாகச் செயற்பட்டு சுழிபுரம், தொல்லிப்பளை, கொக்குவில் ஆகிய இடங்களில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டமைக்காகவும் இந்திய இராணுவம் வெளியேறிய பின்னரும் எமது இயக்கத்தின் பெயரைப் பயன்படுத்தி ஊரெழு, இணுவில், தாவடி, சண்டிலிப்பாய், அளவெட்டி, அராலி, கோண்டாவில், கல்வியங்காடு, தச்சன்தோப்பு ஆகிய இடங்களில் பல வீடுகளில் நகைகள், பணம் கொள்ளையிட்டமைக்காகவும் இத்தண்டனை அவர்களுக்கு விதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட கண்ணன் என்பவருக்கு சண்டிலிப்பாயிலும் ராஜன் என்பவருக்கு அரியாலை தபாற்கட்டைச் சந்தியிலும் அப்புலிங்கம் என்பவருக்கு சங்கானையிலும் வைத்து மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இவர்களால் கொள்ளையிடப்பட்டு மீட்கப்பட்ட பொருள்கள் ஏற்கனவே உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

---

வடக்கில் [illegible]

மூலம் பரீட்சை ஆணையாளருக்கு அறிவித்தார்.

பரீட்சைத் திணைக்களம் மேற்படி பரீட்சையை நாடு முழுவதும் நடாத்துவதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டு வருகின்றது.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் பரீட்சை நடாத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய தகவல்கள் நேற்று வரை பரீட்சை ஆணையாளருக்கு கிடைக்கவில்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

நவம்பர் [illegible]

களில் பரீட்சை நடைபெறும். பரீட்சையைத் தொடர்ந்து டிசம்பர் 4ஆம் திகதி மாணவர்களுக்கு தேர்ச்சி அறிக்கை வழங்கப்பட்டு 5ஆம் திகதி விடுமுறை ஆரம்பமாகும். (க)

---

க. பொ. த. சா [illegible]

மாவட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமெனவும்சங்கம்பணிப்பாளரைக் கண்டு வலியுறுத்தவுள்ளது என பொதுச்செயலாளர் மகாலிங்கம் தெரிவித்துள்ளார்.

---

உணவு [illegible]

அவையும். அட்டவணையில் குறிக்கப் [illegible]

## அமைச்சர் ராஜாராமுக்குக் கல்தா

முதலமைச்சர் செல்வி. ஜெயலலிதாவின் ஆலோசனையின் பேரில் மாநில உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சர் கே. ராஜாராம் மாநில அமைச்சரவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

அவருக்குப் பதிலாக ஜே விஸ்வநாதன் உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சராக நியமனம் பெறுகிறார்.

பதவிப் பிரமாணம் வெள்ளிக்கிழமை அன்று நடைபெறும் என்று சென்னை ஆளுநர் மாளிகைச்செய்திக்குறிப்பொன்று தெரிவிக்கின்றது.

# தமிழக மீனவர்களுக்கு அமைச்சர் எச்சரிக்கை

தமிழக மீனவர்கள் கடற்படையினரால் முழுதும் பாதுகாக்கப்படுவார். இந்தியாவின் கடல் எல்லையை கடக்க வேண்டாம் என்றும் மீனவர்களை பாதுகாப்புத்துறை இணை அமைச்சர் எச்சரித்தார்.

மீனவர்கள் புலிகளுக்கோ அல்லது கடத்தல் காரர்களுக்கோ கையாட்களாகப் பயன்பட்டு கடல் எல்லையைத் தாண்டக் கூடாது. அப்படித் தாண்டிச் செல்பவர்களை சிறிலங்கா கடற்படை புலிகளின் ஆதரவாளர்களாகக் கருதப்படவேண்டிய கட்டாய நிலை ஏற்படுகிறது என்றார்.

# 100 கோடி அமெ. டொலர் சிறிலங்கா கோருகிறது

1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் நடைபெற இருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இலங்கை நூறுகோடி அமெரிக்க டொலர் தொகையை உதவியாகக் கோரியுள்ளது என்று 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

ஆனால் இச் செய்தியினை மறுத்த நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் "உண்மைக்குப் புறம்பான செய்தியை ஐலண்ட் வெளியிட்டுள்ளது என்றும், இந்த நிதியுதவி பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாதென்றும்" குறிப்பிட்டுள்ளது.

---

புலிகளின் [illegible]

விசைப்படகு மூலமான நடமாட்டம் முற்றிலும் தடுக்கப்பட்டு விட்டது என்றும் தெரிவித்தார்.

கடந்த ஆறு, ஏழு மாதங்களில் எமது கடற்படையினர் 25,000 படகுகளைசோதனையிட்டனர் என்றும், 10,000 படகுகளில் ஆழ்கடலுக்குச் சென்று இந்தச்சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும், 257 படகுகளை கைப்பற்றி 187 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக கிருஷ்ணகுமாரும் கடற்படைத் தலைமைத் தளபதி அட்மிரல் ராமதாசும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்து விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவது பற்றி ஆலோசனைகள் நடத்தினார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

---

சண்டே [illegible]

மட்றிட் சமாதான மாநாடு

# பாலஸ்தீனப் போராட்டத்தை பலவீனப் படுத்தும் முயற்சி

(தெஹ்ரான்)

மட்றிட் சமாதான மாநாடு பாலஸ்தீனியப் போராட்டத்தைப் பலவீனமாக்கும் ஒரு முயற்சியே என்று பாலஸ்தீனம் பற்றிய தெஹ்ரான் மாநாட்டில் கலந்துகொண்ட பிரதிநிதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

அவர்கள் மேலும் கூறுகையில் மட்றிட் மாநாட்டை 1973 இல் நடைபெற்ற காம்ப் டேவிட் மாநாட்டுடன் ஒப்பிட்டனர். பாலஸ்தீனிய விடுதலைஇயக்கத்தலைவர் யாசீர் அரபாத் மாநாட்டிற்கு ஆதரவு தெரிவித்திருப்பது பற்றிக் கேட்டபோது தாங்கள் கருத்துச் சுதந்திரத்தை ஆதரிப்பதாகவும், ஆனால் தங்களது உள்விவகாரங்களில் எவரும் தலையிட அனுமதிக்கப்போவதில்லை எனவும் தெரிவித்தனர்.

இதேவேளை நேற்று ஸ்பெயின் தலைநகர் மட்றிட்டில் அரபுக்களுக்கும், இஸ்ரேலுக்கும் இடையிலான சமாதான மாநாடு ஆரம்பமாகியது இம்மாநாட்டின் ஆரம்ப வைபவத்தில் அமெரிக்கஅதிபர் ஜோர்ஜ் புஷ்ஷும், சோவியத் அதிபர் கொர்பசேவும் கலந்துகொண்டனர்.

இச்சமாதான மாநாடு 43 வருடங்களாக நீடித்துவரும் அரபுக்களுக்கும், யூதர்களுக்கும் இடையிலான மோதலை முடிவுக்குக்கொண்டுவரும் சிறந்த ஒரு சந்தர்ப்பம் என்று அவர்கள் இருவரும் கூட்டாக கருத்து வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் இந்த மாநாட்டை தகுந்த முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தனர்.

இதேவேளை "சமாதானம் ஒரு ஸ்திரமான அடித்தளத்தில் கட்டியெழுப்பப்படவேண்டும். ஆனால்சிலர்சமாதானத்திலும்பார்க்க ரத்தத்திலேயே அக்கறை கொண்டிருப்பதாக" அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் ஜேம்ஸ் பேக்கருடன் இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தைபற்றிப்பேசிய பின் செய்தியாளரிடம் இஸ்ரேலியப் பிரதமர் சமீர் கூறியுள்ளார். அவர் மேலும் பேசுகையில் சம்பந்தப்பட்ட நாடுகளுடன் தனித்தனியாக நேரடிப் பேச்சுவார்த்தை நடாத்தவே தாம் விரும்புவதாகவும் ஆனால் அது இலகுவானதாக இராது எனவும் தெரிவித்தார்.

இதனிடையே ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களுக்கமைய நீதியான சமாதானத் தீர்வை வழிவகுக்க விடுவதற்கே சிறந்த மனது [illegible] பாலஸ்தீன விடுதலை இயக்கப்பிரதிநிதியாக தெஹ்ரான் மாநாட்டில் இடம்பெற்றுள்ள அஷ்ரப் ஹாஷானி கூறியுள்ளார்.

# இஸ்ரேலுடன் கை குலுக்க சிரியப்பிரதிநிதிகள் மறுப்பு

(மட்றிட்)

மட்றிட் சமாதான மாநாடு நடைபெறும் மண்டபத்தில் இருக்கும் மேசை ஆங்கில எழுத்தான 'T' வடிவில் அமைக்கப்பட்டிருப்பதாகவும், இதன் மூலம் அரபு - இஸ்ரேலியப் பிரதிநிதிகள்நேரடியாக முகம் பார்த்துப் பேசுதல் தடுக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் இஸ்ரேலிய தரப்புப் பிரதிநிதிகளுடன் தாம் கை குலுக்கிக் கொள்வதற்கும் சிரியப் பிரதிநிதிகள் மறுத்துவிட்டனர்.

இதனிடையே இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் அரபு தரப்புப் பிரதிநிதிகள் அனைவருக்கும் தாம் மரண தண்டனை விதித்திருப்பதாக ஈரானிய நாடாளுமன்ற உறுப்பினரான முக்தார் ஷமி கூறியுள்ளார். இவர் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பின் தலைவர் எனக் கருதப்படுகிறார்.

மேலும் பாலஸ்தீனியப் பிரதிநிதிகள் தெரிவித்தது நேற்று இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள பாலஸ்தீனப் பகுதிகளில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பாலஸ்தீனியர்களுக்கும், மாநாட்டு ஆதரவாளர்களுக்கும் இடையே கலவரம் மூண்டதில் ஐம்பது பாலஸ்தீனியர் படுகாயமுற்றனர். இதன்போது இஸ்ரேலிய இராணுவத்தினர் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் பதின்மூன்று பாலஸ்தீனியர் படுகாயமடைந்தனர்.

ஆனால் இம்மாநாடு வெற்றிபெறவேண்டுமெனத் தான் விரும்புவதாகப் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் கருத்து வெளியிட்டுள்ளார்.

---

## போர்க்கால விளக்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப் பிரிவில் [illegible]

படும் ஜெயராசா நந்தகுமார் (28) சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்தவருக்கும் ராஜன் என்றழைக்கப்படும் செல்லத்துரை பரராஜசிங்கம் (38) 5/1 ஸ்ரான்லி கல்லூரி வீதி, அரியாலை மேற்கைச்சேர்ந்தவருக்கும், அப்புலிங்கம் என்றழைக்கப்படும் கந்தசாமி உதயேந்திரன் (20) அராலி வடக்கு வட்டுக்கோட்டையைச்சேர்ந்தவருக்கும் நேற்று முன்தினம் காலை பத்து மணிக்கும் பதினொருமணிக்குமிடையே விடுதலைப் புலிகளால் மரண தண்டனை வழங்கப்பட்டது.

இவர்கள் இந்திய இராணுவம் தமிழீழத்தை ஆக்கிரமித்திருந்த காலப்பகுதியில் ஆயுதம் தாங்கிய குழுவாகச் செயற்பட்டு சுழிபுரம், தெல்லிப்பழை, கொக்குவில் ஆகிய இடங்களில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டமைக்காகவும் இந்திய இராணுவம் வெளியேறிய பின்னரும் எமது

படுத்து ஈவினை, இணுவில், தாவடி, சண்டிலிப்பாய், அளவெட்டி, அராலி, கோண்டாவில், கல்வியங்காடு, தச்சன்தோப்பு ஆகிய இடங்களில் பல வீடுகளில் நகைகள், பணம் கொள்ளையிட்டமைக்காகவும் இத்தண்டனை அவர்களுக்கு விதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

இக் குழுவின் தலைவராகச் செயற்பட்ட கண்ணன் என்பவருக்கு சண்டிலிப்பாயிலும் ராஜன் என்பவருக்கு அரியாலை தபாற்கட்டைச் சந்தியிலும் அப்புலிங்கம் என்பவருக்கு சங்கானையிலும் வைத்து மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது.

இவர்களால் கொள்ளையிடப்பட்டு மீட்கப்பட்ட பொருள்கள் ஏற்கனவே உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை தெரிந்ததே.

வடக்கில்

மூலம் பரீட்சை ஆணையாளருக்கு அறிவித்தார்.

பரீட்சைத் திணைக்களம் மேற்படி பரீட்சையை நாடு முழுவதும் நடாத்துவதற்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்டு வருகிறது.

ஆனால் கிழக்கு மாகாணத்தில் பரீட்சை நடாத்துவதற்கான சாத்தியக்கூறுகள் பற்றிய தகவல்கள் நேற்று வரை பரீட்சை ஆணையாளருக்கு கிடைக்கவில்லை என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

நவம்பர்

களில் பரீட்சை நடைபெறும். பரீட்சையைத் தொடர்ந்து டிசம்பர் 4ஆம் திகதி மாணவர்களுக்கு தேர்ச்சி அறிக்கை வழங்கப்பட்டு 5ஆம் திகதி விடுமுறை ஆரம்பமாகும். (க)

க. பொ. த. சா

மாவட்டக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் மேற்கொள்ள வேண்டுமெனவும்சம்மேளனப்பணிப்பாளரைக் கண்டு வலியுறுத்தவுள்ளது என பொதுச்செயலாளர் மனோகரன் தெரிவித்துள்ளார்.

உணவு

சேர்த்துக் கொடுக்கப்படமாட்டாது என்பதையும் வாராந்த விநியோகம் ஒரு வாரத்திற்குள் மக்களுக்கு விநியோகித்து முடிக்க வேண்டும் என்றும் பிந்தியவர்கள் தமது பங்கீட்டுத் தொகைப் பொருள்களை இழக்கவேண்டி நேரிடும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

நவம்பர் மாதம் தொடக்கம் 5 அங்கத்தவர்களையும் அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்களையும் கொண்ட குடும்பத்திற்கு தற்போது வழங்கப்படும் 750 கிராம் சீனி ஒரு கிலோவாக வழங்கப்படுவதென தீர்மானிக்கப்பட்டது.

உணவு முத்திரை வைத்திருப்போர் அவ் உணவு முத்திரைக்கான பொருள்களையும் மிகுதிப் பொருள்களை அட்டவணையில் குறிக்கப்பட்ட எல்லைக்குட்பட்டு பணம் செலுத்தி கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு முத்திரைக்கு கொள்வனவு செய்யும் பொருள்கள் இவ் அட்டவணைக்கு புறம்பானதாக

அவையும்.

அட்டவணையில் குறிக்கப்பட்ட பொருள்களில் எதேனும் ஒரு பொருளை மட்டுமாக கொள்வனவு செய்து மிகுதியை மீண்டும் கொள்வனவு செய்ய விரும்புவோர் முன்னர் கொள்வனவு செய்த பற்றுச் சீட்டை சம்பந்தப்பட்ட சங்கங்களுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

நெடுந்தீவு மக்களின் நன்மை கருதி அவர்களுக்கு கப்பல் மூலம் உணவுப் பொருள்கள் கொழும்பிலிருந்து அனுப்புவதற்கு நடவடிக்கை எடுப்பதென தீர்மானிக்கப்பட்டது.

அரிசி ஆலைகளிலிருந்து நாட்டரிசியினை கூட்டுறவுச் சங்கங்கள் கொள்வனவு செய்து பாவனையாளர்களுக்கு பங்கீட்டு அட்டவணையின் உச்ச எல்லைக்குட்பட்டு வழங்கீடு செய்ய அனுமதிக்கப்பட்டது. (தி)

தேங்காய் எண்ணெய்

கப்பட்டுள்ளது.

யாழ். செயலகத்தில் இடம்பெற்ற கூட்டத்தில் அத்தியாவசிய பொருட்களின் பட்டியலிலிருந்து தேங்காய் எண்ணெயை நீக்குவதான முடிவு எடுக்கப்பட்டது. (தி)

இலங்கை அமைச்சர் எச்சரித்தார்.

மீனவர்கள் புலிகளுக்கோ

# 100 கோடி அமெ. டொலர் சிறிலங்கா கோருகிறது

1992ஆம் ஆண்டு பெப்ரவரிமாதம் நடைபெற இருக்கும் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இலங்கை நூறுகோடி அமெரிக்க டொலர் தொகையை உதவியாகக் கோரவுள்ளது

என்று 'ஐலண்ட்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது.

ஆனால் இச் செய்தியினை மறுத்து நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் "உண்மைக்குப் புறம்பான செய்தியை ஐலண்ட் வெளியிட்டுள்ளது என்றும், இந்த நிதியுதவி பற்றி தங்களுக்குஎதுவும் தெரியாதென்றும்" குறிப்பிட்டுள்ளது.

புலிகளின்

விசைப்படகு மூலமான நடமாட்டம் முற்றிலும் தடுக்கப்பட்டு விட்டது என்றும் தெரிவித்தார்.

கடந்த ஆறு, ஏழு மாதங்களில் எமது கடற்படையினர் 25,000 படகுகளைசோதனையிட்டனர் என்றும், 10,000 படகுகளின் அழ்கடலுக்குச் சென்று இந்தச்சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன என்றும், 257 படகுகளை கைப்பற்றி 187 பேர் கைது செய்யப்பட்டனர் என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக கிருஷ்ணகுமாரும் கடற்படைத் தலைமைத் தளபதி அட்மிரல் ராம்தாசும் தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவைச் சந்தித்து விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளைகட்டுப்படுத்துவது பற்றி ஆலோசனைகள் நடத்தினார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சண்டே

அத்துடன் சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுவரும் தாங்கள் பத்திரிகைகளுக்கு செய்தி வெளியிடுவது வழக்கமல்ல என்றும், இத்தகையதொரு செய்தியை தாம் வெளியிடவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

சார்க்

உத்தியோக பூர்வ பேச்சுவார்த்தைகளை நேற்று மாலை தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடத்தினார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்தை தொடர்ந்து நவம்பர் 2ஆம் திகதி வெளிவிவகார செயலாளர்களின் மூன்று நாள் கூட்டம் ஆரம்பமாகும்.

வரைதாள்

வதற்கு வசதியாக ஒவியவரைதாள்களை வடபகுதிக்கு எடுத்து வருவதற்கான முயற்சிகளில் யாழ் கல்வித் திணைக்களம் ஈடுபட்டிருக்கின்றது. இதற்காக கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகத்திடம் மேற்படி தாள்களை எடுத்து வருவதற்கு அனுமதி தரும்படி விண்ணப்பம் ஒன்றை அனுப்பி வைத்திருப்பதாக பிரதமகல்வி அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (க)

களின் ஆதரவாளர்களாகக் கருதப்படவேண்டிய கட்டாய நிலை ஏற்படுகிறது என்றார்.

சுவிட்சலாந்து

ளதாகவும் தெரிய வருகிறது இலங்கை வரும் இவ் அதிகாரி கொழும்பில் சிறிலங்கா அரசாங்கத்துடனும் யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார். இவ் அதிகாரியின் விஜயத்தின் போது இலங்கைக்கு வெளியில் ஐரோப்பிய நாடு ஒன்றில் சுவிட்சலாந்தின் மத்தியஸ்தத்தின் கீழ் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாக விவாதிக்கப்படலாம் எனவும் தெரிய வருகின்றது.

இதேவேளைசுவிட்சலாந்தில் சுமார் 20,000 இலங்கைத் தமிழ் அகதிகள் உள்ளனர் என்பது தெரிந்ததே. அண்மையில் பிரிட்டனில் இருந்து வெளியேறிய முன்னாள் யாழ் மாவட்டத் தளபதி கிருஸ்ணகுமாருக்கும் (கிட்டு) சுவிட்சலாந்து அரசாங்கமே அரசியல் புகலிடம் அளித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பாலியல்

இருவருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது.

திருமலையிலிருந்து இடம் பெயர்ந்து முல்லைத்தீவு மாவட்டத்தில் வள்ளிபுரம் என்ற இடத்தில் வசித்துவந்த மகேந்திரம் சுசியா என்ற பெண்ணை பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியதுடன் அப்பெண்ணிடமிருந்த தங்க நகைகளையும் அபகரித்து அப்பெண்ணை கொலை செய்தமைக்காக நவரட்ணம் விக்கினராசன், சந்திரேசு தேவராசா ஆகிய இருவருக்கும் நேற்று முன்தினம் உடையார்கட்டு சந்தியில் வைத்து பகிரங்க மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. அத்துடன் அப்பெண்ணின் கணவனான மகேந்திரத்திற்கும் பெண்ணின் சகோதரியான கோகிலாராணிக்கும் பாலியல் தொடர்பு வைத்திருந்தார்கள் என்பதற்காகவும் இப் பெண்ணின் வீட்டில் இருந்து தங்க நகைகளை அபகரித்தார்கள் என்பதற்காகவும் இருவருக்கும் ஒரு வருட சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருக்கின்றது.

இச்சமாதான மாநாடு 43 வருடங்களாக நீடித்துவரும் அரபுக்களுக்கும், யூதர்களுக்கும் இடையிலான மோதலை முடிவுக்குக்கொண்டுவருஞ் சிறந்த ஒரு சந்தர்ப்பம் என்று அவர்கள் இருவரும் கூட்டாக கருத்து வெளியிட்டுள்ளனர்.

அத்துடன் இந்த மாநாட்டை

இதனிடையே ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களுக்கமைய நீதியான சமத்துவத் தீர்வொன்றை வழிவகுக்க இந்த மாநாட்டு விடுவதற்கு சிறந்த மனது ... பாலஸ்தீன விடுதலை இயக்கப்பிரதிநிதி ... குழுவில் இடம்பெற்றுள்ள ... ராபி ஹனான் அஷ்ராவி கூறியுள்ளார்.

# இஸ்ரேலுடன் கை குலுக்க சிரியப்பிரதிநிதிகள் மறுப்பு

(ரிட்டர்)

மட்றிட் சமாதான மாநாடு நடைபெறும் மண்டபத்தில் இருக்கும் மேசை ஆங்கிலஎழுத்தான T வடிவில் அமைக்கப்பட்டிருப்பதாகவும், இதன் மூலம் அரபு - இஸ்ரேலியப் பிரதிநிதிகள்நேரடியாக முகம் பார்த்துப் பேசுதல் தடுக்கப்பட்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

இதேவேளை இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் இஸ்ரேலிய அரப்புப் பிரதிநிதிகளுடன் தாம் கை குலுக்கிக் கொள்வதற்கும் சிரியப் பிரதிநிதிகள் மறுத்துவிட்டனர்.

இதனிடையே இம்மாநாட்டில் கலந்துகொள்ளும் அரபு நாட்டுப் பிரதிநிதிகள் அனைவருக்கும் தாம் மரண தண்டனை விதித்திருப்பதாக ஈரானிய நாடாளுமன்ற உறுப்பினரான முக்தார் ஷமி கூறியுள்ளார். இவர் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்பின் தலைவர் எனக் கருதப்படுகிறார்.

மேலும் பாலஸ்தீனியப் பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்துகொள்வதற்கு எதிர்ப்பு

தெரிவித்து நேற்று இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் உள்ள பாலஸ்தீனப் பகுதிகளில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட பாலஸ்தீனியர்களுக்கும், மாநாட்டு ஆதரவாளர்களுக்கும் இடையே கலவரம் மூண்டதில் ஐந்து பாலஸ்தீனியர் படுகாயமுற்றனர். இதன்போது இஸ்ரேலிய இராணுவத்தினர் நடாத்திய துப்பாக்கிச் சூட்டில் பதின்மூன்று பாலஸ்தீனியர் படுகாயமடைந்தனர்.

ஆனால் இம்மாநாடு வெற்றிபெறவேண்டுமெனத் தான் விரும்புவதாகப் பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் கருத்து வெளியிட்டுள்ளார்.

வீரவணக்கம்

போதைய முகவரி நீதிமன்ற வீதி, மல்லாகம்) நேற்று வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்தியுள்ளனர்.

பலியான

மலையில் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் பன்னிரண்டு படையினர் கொல்லப்பட்டதாக அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது இத்தாக்குதலில் எட்டு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகமுன்னர்வெளிவந்த செய்திகள்தெரிவித்திருந்தன.

மிரட்டலை

கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது ஆயினும் அவை இராணுவத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படவில்லை. (தி)

குறுகிய

டாலும் கொழும்பில் குறைவான நேரமே தங்கியிருப்பார் என இந்தியப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன. சார்க் உச்சி மாநாடு நவம்பர் 7முதல் 9 வரை மூன்று நாட்கள் நடைபெறும்.

# போர்க்கால விளக்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சிப்பிரிவில் உள்ள பளை மகாவித்தியாலயத்தில் இன்று மாலை 7-30 மணிக்கு போர்க்கால விளக்கவுரைக் கூட்டம் நடைபெற உள்ளது. இந்நிகழ்வில் தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பொறுப்பாளர்திரு. தமிழேந்தி, யாழ். மாவட்ட மக்களுறவு கொள்கை முன்னெடுப்புப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி (ஆஞ்சி) விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த செல்வி சந்திரா ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றுவர்.

போராளி

உதவியாளர்களும் எதிர்பாராத விதமாக இராணுவத்தினரைச் சந்திக்க நேர்ந்தபோது நடைபெற்றமோதலில் இம்மூவரும் வீரமரணமடைந்துள்ளனர். இம்மோதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

2 ஆவது லெப் விஜே (கந்தையா வடிவேல் கிரான்), லிஸ்மா (21) கிரான். தேவராசா (31) கிரான் ஆகியோரே இந்தச் சம்பவத்தில் வீரமரணமடைந்தவர்களாவர். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்தியுள்ளனர்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.